ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஓர் ஸமுதாயகார்யம் ஸித்திபெறவேண்டுமானால் அந்த ஸமுதாயத்திலகப்பட்டவர்கள் ஒற்றுமையோடு சாந்த நிலையில் அவரவரால்ஆகக் கூடிய கார்யத்தைதச்செய்யவேண்டுமென்பது யாவருமறிந்த விஷயம். அப்படியிருக்கையில் அந்த ஸமுதாயத்திற்சேர்ந்தவர்கள் ஒற்றுமையடைவதில்லை என்பதோடிராமல் சிலசிலபேர்கள் சேர்ந்து தனித்தனியாக கூட்டம்போட்டுக்கொண்டு ஒருகூட்டத்தாரை மற்றொரு கூட்டத்தார் துவேஷித்துக்கொண்டும், தூஷித்துக்கொண்டும், ஒருகூட்டம் ஜீவித்திருப்பதையே மற்றொருகூட்டம் ஸஹிக்காமலுமிருந்துவந்தால் ஸமுதாய கார்யமெப்படி நிறைவேறப்போகிறது? ஸமுதாயத்திற்கு ஒரே கார்ய ஸித்தியில் நோக்கமிருந்தாலும், பல கார்யஸித்திகளில் நோக்கமிருந்தாலும், அவைநிறைவேற பரஸ்பர ஒற்றுமையும், ஸ்நேஹமும் காரணம். ஸமுதாயத்தில் பிளவு ஏற்பட்டுவிட்டால் கார்யஸித்திகைகூடாதென்பதுமாத்திரமல்ல, கார்யஸித்திக்கு கெடுதியுமுண்டாய்விடும். இந்த உதாஹரணம் போல் பூமண்டலத்திலிருக்கும் எல்லாபிராணிகளும்சேர்ந்து ஓர்ஸமுதாயமாவார்கள். அந்த ஸமுதாயத்திற்கு பேரின்பமென்னும் பேரானந்தம் பெறுவதிலேயே முக்கியமாக நோக்கமிருப்பினும், தாத்காலிகமாக அவரவர்களுக்குப் பிரியமான சிற்றின்பங்களிலும், பலவகைப்பட்ட நோக்கங்களிருக்கலாம். அவை யாவையும் ஸாதித்துக்கொள்ளவேண்டுமாகில் ஸாத்துவிகமுறையில் சாந்தநிலையில் ஸ்நேஹத்தோடு எல்லோருமொற்றுமைப்படவேண்டும். அவரவர்களால் செய்யக்கூடிய கார்யத்தை அவரவர்களும் செய்துகொண்டுவரவேண்டும், எல்லா கார்யங்களையும் எல்லோருமே செய்துவிடமுடியாது. ஒருகார்யத்திற்றான் ஒருவனுக்கு ஸாமர்த்தியம் அதிகமாயிருக்கும். நீடித்த பழக்கத்தால் அப்படிநேருவது ஸம்பாவிதமே. அதிலும் ஜன்ம பரம்பரையாகப் பழக்கப்பட்டவர்களுக்குஸாமர்த்தியம்ஸஹஜமாயிருப்பது பிரத்தியக்ஷானுபவமே,அத்தகைய கார்யத்தில் அவர்களை நியமிப்பதே நல்லது. ஒரு ஸமூகத்தில் எல்லாவற்றையும் பலவிதத்திலும் அனுபவித்துத்தெரிந்துகொண்டிருப்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அவர் ஆக்ஞைபின்கீழ் ஸமூஹ கார்யத்தை நடத்துவதுபோல ஸர்வபிராணிகளின் ஸமுதாய கார்யம் ஸர்வக்ஞனும் ஸர்வசக்தனுமானஒருவன் ஆஞ்ஞையின்கீழ் நடைபெறுவதே நியாயமாகும் அப்படி ஸர்வ பிராணிகளுக்கும் தலைவராகத் தீர்க்கதரிசிகளான தபோதனர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தேவதேவனான மஹாதேவனொருவனேயாவார். அவராக்ஞைப்படி நடப்பதே நன்மையைப்பயக்கும், இப்படிநடக்கவேண்டியிருக்க தற்போது சிலர் தனிக்கூட்டமாகப் பிரிந்து கண்டபடி பிறரைத்தூஷித்துவருவது கார்யத்திற்குக் கெடுதியேயன்றி அனுகூலமேயில்லை. இவ்வுண்மையையறிந்து யாவரும் பரமேச்வரனது ஆக்ஞைப்படிநடந்து க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்,

ப்ரஜாபதி-ஷு மார்கழி மீ கசூஉ

## பிறர் கார்யத்தைப்பார்ப்பவனே பெரியவன்.

ஸ்வகார்யத்தை சிரத்தையுடன் செய்வதைவிட பிறர்கார்யம் பெரிதெனப் பார்ப்பவனே பெரியவன். பிறர்கார்யத்தைப் பக்தியுடன் பார்த்துவந்தால் தன்கார்யம் தானாகவே கைகூடி வரும். பிறர் குழந்தையைப் போற்றி வளர்த்தால் தன்குழந்தை தானே வளருமென்று மூத்தோர் மொழியன்றோ! இப்படித்தான் பிரபஞ்சோற்பத்திமுதல் நாளது வரையில் பெரியோர்கள் அநுஷ்டித்துவந்த சம்பிரதாயம். கொஞ்சநாளாகக் கலியின் வலிமையால் ஸர்வ பிராணிகளுக்கும் ஸ்வகார்யமே பெரிதெனத் தோன்றிவிட்டது. அம்மட்டோடு நிற்காமல் சிலருக்குப் பிறர் நன்மையைக் கெடுத்தே கார்யஸாதனம் செய்யவேண்டுமென்ற துர்புத்தியும் தோன்றிவிட்டது. அதிலும் சில கொடுமையுள்ளவர்களுக்கு - "ஒரு கார்யஸித்தியும் வேண்டாம். பிறர் கெடுவதே பெரிய புருஷார்த்தமென" த்தோன்றியிருக்கிறது.

இவர்களைப்பற்றி—

एते सत्पुरुषाः परार्थघटकाः स्वार्थान् परित्यज्य ये
सामान्यास्तु परार्थमुद्यमभृतः स्वार्थाविरोधेन ये ।
तेऽमी मानुषराक्षसाः परहितं स्वार्थाय निघ्नन्ति ये
ये तु घ्नन्ति निरर्थकं परहितं ते के न जानीमहे ॥

"தன் கார்யங்களை விட்டுப் பிறர்காரியத்தைச் சாதித்துக் கொடுப்பவர்களே உத்தம ஸத்புருஷர்கள். தன் கார்யத்திற்கு விரோதமில்லாமல் பிறர்பிரயோஜனத்திற்காகமுயலுபவர்கள் மத்தியமர்கள் தன் கார்யத்திற்காக அன்னியர்களுடைய ஹிதத்தைக் கெடுப்பவர்கள் அதமர்களான மானிடவேடம் பூண்ட ராக்ஷஸர்கள். எவர் ஒரு பிரயோஜனமுமில்லாமல் பிறர்நலத்தைக் கெடுக்

கிறார்களோ! அவர்களை யாரென்று சொல்லலாமென்பதை நாம் தெரிந்துகொள்ளவில்லை,, என்று நீதிநூல் கூறுகின்றது. தற்போதோ, தனித்தனிக் கூட்டமாகப்பிரிந்த பல கூட்டத்தார் ஒவ்வொருவரும் பொதுநலத்திற்குழைப்பதாகப் பெயரைவைத்துக் கொண்டு தம்தம் சுயநலத்தையே பெரிதாகப் பாவித்து அதை ஸாதிக்கப் பெரும்பாடுபட்டு வருகிறார்கள். ஒருவர் செய்யும் கார்யத்திற்குப் பக்கத்திலுள்ளவர்களும் ஸாதகமாய் நிற்பார்களானால் அந்தக்கார்யம் எளிதில் கைகூடும். ஸாதகமா யில்லாவிடினும் பாதகம் செய்யாமலாவது இருந்தால் அதுவே பெரிதாகும். பாதகம் செய்வதென்றே பலர் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தால் அந்தக்கார்யத்தைக் கண்டெடுப்பது கனவிலுமில்லை. ஓர்பிரபு தன்னுடைய ஒவ்வொரு அவயவங்களையும் சுசுரூஷிப்பதற்காக பிரத்யேகமான மனுஷ்யர்களை யேர்படுத்தியிருந்தால் அவர்கள் தம் அவயவத்திற்கு சுசுரூஷை செய்கையில் மற்ற அவயவங்களுக்கும் அது ஸாதகமாயிருக்கும்படி செய்தால் நலமாகும். ஸாதகமா யில்லாவிட்டாலும் பாதகமாயிருக்கவே கூடாது. பாதகமாயிருந்துவிட்டால் மற்ற அவயவங்கள் சுகப்படுவதெங்கே? உதாரணமாக — அஜீர்ணம் கொண்டிருக்கும் ஸமயத்தில்—"அது வயிற்றிற்றானே யிருக்கின்றது—நமது அவயவத்தை நாம் பரிஷ்கரிப்போ மெனக்கருதி தலையை சுசுரூஷிப்பவன் அதில் எண்ணெயிட்டுத் தேய்ப்பானேயாகில்" அது ஹிதமாகுமா? அஜீர்ணமுள்ளவன் அப்யங்கத்தை வர்ஜிக்கும்படி

वर्ज्योऽभ्यङ्गः कफग्रस्त कृतसंशुद्ध्यजीर्णिभिः ।

"கபமதிகமாயுள்ளவன், சோதனம் செய்துகொண்டவன், அஜீர்ணங்கொண்டவன், இவர்களால் அப்யங்கம் விலக்கத்தக்கது" என்று வைத்தியநூல் விதிக்கின்றது. அதற்கு விபரீதமாய்ச் செய்தால் வயிறு சுகமாயிருப்பதெப்படி? இதுபோல் பூமண்டலத்தில் பிராணிகள் பல பிரிவுகளாகப் பிரிபட்டிருந்தாலும் ஒருவருடைய ஹிதத்திற்கு மற்றவர் அநுகூலமாகவே யிருக்கவேணும். அநுகூலமாயில்லாவிடினும் பிரதிகூலமாக யிருக்கவே கூடாது. ஒரு அவயவம் கெட்டுப்போனால் மற்ற அவயவங்கள் அநுகூலமாயிருக்கமாட்டா! அவைகளையுடைய பிரபுக்கு சுகமும் கிடைக்காது. அதுபோல் ஒரு வகுப்பாரை துவேஷித்துக்

கொண்டு மற்றவகுப்பார் சுயநலத்தைப் பாராட்டி சுயமரியாதையை நாடுவாராகில் மற்றவகுப்பார்நன்மை யடைவதெங்கே? சிலர் சிரமப்படும்படி செய்துவிடுவது பொதுநலமாகுமா? பாரதமாதா சுகப்படுவாளா? பாரதமாதாவின் ஓர் அவயவமாகிய ஓர் வகுப்பார் பரிதபிக்கையில் பாரதபூமி எப்படி சுபிக்ஷமாயிருக்கும். தாழ்த்தப்பட்டதாக ஒரு வகுப்பாரை வைத்திருப்பது நியாயமாவென்று சிலர் சங்கை கொள்ளுகிறார்கள். வேணுமென்று அவர்களை ஒருவரும் தாழ்த்தவில்லை. இயற்கையா யமைந்ததை, மாற்றுவதெப்படி? கால், தாழ்ந்த நிலையிலமைக்கப்பட்டிருப்பது தகுதியல்லவென்று நினைக்கமுடியுமா? அதன்வேலை யாவதற்கா அந்த நிலைமையிலொன்று இருக்கவேண்டியது அவசியந்தானே ஆகையால் வீண்கக்ஷி செய்துகொண்டு தலைவனுக்கு விரோதமாக நடக்காமல் அவரிட்ட சட்டப்படி நடந்து பிறர்கார்யத்தையே பெரிதாக பாவித்து பரோபகாரம்செய்து பரமசிரேயஸ்ஸை யாவருமடைவார்களாக.

சுபம்

பத்திராதிபர்.

---

# ஸ்ரீ நடேசஸ்துதி.

(1047-ம்பக்கத்தொடர்ச்சி)

स्वामिन्भूसुरपीडनाद्भवमहापापान्विते दिक्पतौ
सर्वेष्वब्धिषु निर्जलेषु विबुधैः गीर्वाणनाथादिभिः ।
तिल्वारण्यगतैर्नुतश्च वरुणं पापात्पुनासि स्म तं
गत्वा माघमखेऽब्धिमीश भवतः किंदुष्करं मामव ॥४३॥

ஓ ஸ்வாமின்! மேற்குதிக் பாலனான வருணன் பிராமணஹிம்சையால் மகாபாபத்தை அடைந்த பொழுது சகல சமுத்திரங்களும் ஜலமில்லாமலிருக்கும் பொழுது தில்வாரண்ய மென்கிற சிதம்பர க்ஷேத்ரமடைந்த இந்திரன் முதலான தேவர்களால் ஸ்துதிக்கப்பட்ட நீர் மாசிமாச மகநக்ஷத்திரத்தில் சுமார் ஒன்பது மைல் தூரமுள்ள சமுத்திரஞ் சென்று அந்த வருணனை பாபத்திலிருந்து பரிசுத்தஞ் செய்தீரல்லவா. ஓ ஈச! உமக்கு எதுதான் செய்ய முடியாதது என்னைக்காப்பாற்றும்.

முன் காலத்தில் வருணன் ஒரு இராக்ஷஸனோடு அநேக வர்ஷங்கள் யுத்தஞ் செய்யும்பொழுது இரவில் ஒரு பிராமண ச்ரேஷ்டன் இருவர்களுடைய சமாதானத்தின் பொருட்டு சமீபத்தில் வர ராக்ஷஸன் என்ற புத்தியினால் வருணன் அந்த பிராமணனைக்கொன்றான். அந்த பிர்ம்மஹத்தி மகா பாபத்தினால் வருணன் தேஜஸ் குறைந்தது. ஏழு சமுத்ரங்களும் சோஷித்தன. மழை பெய்யவில்லை, தாபம் அதிகரித்தது, ஜனங்கள் அதிக கஷ்டத்தை அடைந்தன. பூமியில் யஜ்ஞங்களில்லாததால் மிகக் கஷ்டமடைந்த இந்திரன் முதலான தேவர்கள் தில்லைவனம் வந்து ஸ்ரீ சபாநாயகரை ஸ்தோத்திரஞ்செய்து ஜலபதியான வருணனுடைய மகா பாபத்தை நிவர்த்திசெய்ய வேணுமென்று பிரார்த்தித்தார்கள். சமுத்ர தீரத்துக்குப்போய் நாம் வருணனுடைய பாபத்தை நிவர்த்திசெய்வோம் என்று சொல்லி மாசி மகநக்ஷத்திரத்தில் கருணாசமுத்ரமான ஸ்ரீ நடேசர் சிதம்பர க்ஷேத்திரத்தின் வடகிழக்கிலுள்ள சமுத்ரதீரத்தை அடைந்தார். ஈசனருளால் வருணனுடைய சமஸ்தபாபமும் நாசமடைந்தது. இந்த தினத்தில் இந்த தீரத்தில் ஸ்நாநஞ் செய்யுஞ் ஜனங்களுக்கு சமஸ்தபாபங்களும் சமஸ்தரோகங்களும் விலகவேணும். பரமபதலாபங்கிடைக்கவேணும் என்று வருணன் யாசிக்க அவ்விதமாகவே வரமளித்து சபாநாதர் மறைந்தார். என்னும் சரித்திரத்தை சிதம்பர மாகாத்மியம் 26 வது அத்யாயத்தில்காண்க. குஹ்ய தீர்த்தமென்று மிகச் சிறப்பாய் புண்டரீகபுர மாகாத்மியத்திலும் கூறப்பட்டுள்ள இந்த சமுத்ரதீரத்தில்இப்பவும் மாசிமகத்தில் ஸ்ரீசபாநாயகருடைய தீர்த்த மகோத்ஸவம் சிறப்பாய் நடைபெற்று வருகிறது. சிதம்பரத்தில் பத்து மகா புண்ய தீர்த்தங்களில் இது இரண்டாவது தீர்த்தமாம். அவை யாவன. (௧) சிவகங்கை. (௨) குஹ்யதீர்த்தம். (௩) புலிச்சமடு (௪) வியாக்ரபாததீர்த்தம். (௫) அனந்ததீர்த்தம். (௬) நாகசேரி. (௭) பிரமதீர்த்தம். (௮) சிவப்ரியை. (௯) திருப்பாற்கடல் (௧௦) பரமானந்தகூபம். இவைகளின் வைபவத்தை புண்டரீகபுர மாகாத்மியம் 6-வது அத்யாயத்தில்காண்க. (43)

भक्तानन्दन तावकीनचरणं पद्मारुणं पावनं
ये पश्यन्ति सकृज्जनाः करगता तेषां विमुक्तिः स्थिरा ।

इत्येवं प्रतिपादयन्ति निगमाः तस्मात्त्वदंघ्रिं भजे
दीनं मां घृणया त्वदेकशरणं संसारमुक्तं कुरु ॥४४॥

பக்தர்களை சந்தோஷிப்பிக்கின்ற பரமசிவ. தாமரைப்பூபோல் சிவந்த பரிசுத்தமான உம்முடைய சரணத்தை ஒருதடவை எவர்கள் தர்சிக்கின்றார்களோ அவர்களுக்கு ஸ்திரையானமுக்தியானது சித்தம் என்று வேத புராணங்கள் கூறுகின்றன. ஆதலால் உம்முடைய சரணத்தைப் பஜிக்கின்றேன். உம்மையேகதியென்று நம்பின தீனனான என்னை கருணையால் சம்சாரதுக்கத்திலிருந்து விடுபட்டவனாகச்செய்யும். (44)

ज्ञानानन्दसभाधिनाथ भुवने त्वन्नृत्तसन्दर्शनात्
मुक्तिं यान्ति मृगाश्च बोधरहिता यत्नेन लभ्यामपि ।
स्वामिन् तत्तव ताण्डवं प्रतिदिनं पश्यामि भक्त्यन्वितः
तस्मात्त्वं करुणांबुधे सकरुणं मां पाहि दुःखार्णवात् ॥४५॥

ஓ ஜ்ஞாநாநந்தசபாநாயக! உலகில் உம்முடைய தாண்டவதர்சனத்தால் அறிவில்லாத மிருகங்களும்யத்நத்தால் அடையக்கூடிய முக்தியை அடைகின்றன. ஓ ஸ்வாமிந்! கருணைக் கடலே! அந்தத் தாண்டவத்தைத் தினந்தோறும் பக்தியோடுகூடத்தர்சிக்கின்றேன். ஆதலால் நீர் கிருபைசெய்து என்னைத் துக்கசமுத்திரத்தில்நின்றும் காப்பாற்றும். (45)

நடேசருடைய தாண்டவத்தில் சரணநூபுர சப்தம்கேட்டு மிருகங்களும் பக்ஷிகளும் வந்து தர்சித்து பதஞ்சலி மஹர்ஷியின் துஷ்கரதபோமஹிமையாலடையப்பட்ட முக்திபலத்தை அடைந்தன என்று சிதம்பர மகாத்மியம் 18-வது அத்யாயம் கூறுகின்றது,

नाथ त्वन्मुखपद्मबन्धुमसकृद्ध्यायामि मन्मानसे
गौरीवक्त्रसरोजहर्षजनकं पापान्धकारद्विषम् ।
संसाराख्य गदापनोदचतुरं कारुण्यवृष्टिप्रदम्
क्षिप्रं मामकवाञ्छितं नटपते संपूरय त्वं प्रभो ॥४६॥

ஓ! நாத! காருணியமாகிற மழையைப் பெய்கிறதும், ஸம்ஸாரமென்கிற ரோகத்தை நிவர்த்திசெய்கிறதும், பாபமாகிற இருளை விலக்குகிறதும், பார்வதியினுடைய முகமாகிற தாமரைப் புஷ்பத்

திற்கு ஸந்தோஷத்தைத் தருகிறதுமான உம்முடைய முகமாகிற சூர்யனை எப்பொழுதும் என்னுடைய ஹிருதயத்தில் தியானம் செய்கிறேன்: ஓ! நடபதியாந பிரபுவே! என்னுடையஇஷ்டத்தை சீக்கிரமாகப் பூர்த்திசெய்யும். (46)

शंभो मामकमानसाख्यमधुपः त्वत्पादपद्मोद्भवां
कैवल्याख्यसुधां पिपासुरधुना शीतांशुचूडामणे ।
सञ्चारन्तनुते त्वदंघ्रिकमले भक्तार्तिहानिप्रदे
कारुण्यादमृतं प्रदाय तदमुं तृप्तंकुरुत्वं प्रभो ॥४७॥

ஓ! சம்போ! ஓ! சந்திரசேகரா! என்னுடைய மனதாகிய வண்டானது உம்முடைய சரணமாகிற தாமரைப் புஷ்பத்தில் உண்டான மோக்ஷமாகிற அமிருதத்தை பானம்செய்வதற்கு ஆசைகொண்டு பக்தர்களுடைய துக்கத்தை நிவர்த்தி செய்கின்ற உம்முடைய சரணகமலத்தில் இப்பொழுது ஸஞ்சரிக்கின்றது. ஆகையால் ஓ! ப்ரபோ! கருணையால் அமிருதம் கொடுத்து இந்த மனதாகிற வண்டை நீர் திருப்தி உள்ளதாகச் செய்யும். (47)

लोकेसन्ति विचक्षणा बुधजनाः तत्वार्थसन्दर्शिनः
त्वत्पादांबुजवन्दनैकरतयः कारुण्यपात्रीकृताः ।
स्वामिन्मन्दमतिस्त्वहं तवकृपां वाञ्छामि सर्वेष्टदां
लज्जाशून्यमनाः विधेहि करुणांदीनाग्रगण्ये मयि ॥४८॥

ஓ? ஸ்வாமிந் உலகில் தத்வார்த்தத்தை அறிந்தவர்களும், உம்முடைய சரணகமல நமஸ்கிருதியிலேயே ஆசை உள்ளவர்களும், ஆகையால் உம்முடைய கருணைக்குப் பாத்திரபூதர்களுமான ஸமர்த்தர்களான பண்டிதர்கள் இருக்கின்றார்கள். அல்பபுத்தி உள்ளவனுனலஜ்ஜை இல்லாதவனுன நான் சர்வேஷ்டங்களையும் கொடுக்கின்றஉம்முடைய கருணையை இச்சிக்கின்றேன், மூடசிரேஷ்டனான என்னிடத்தில் கருணைசெய்யும். (48)

राजानं समुपैति पण्डितजनः संपत्तिसंसिद्धये
छात्राणां निवहो यथा गुरुवरं विज्ञानसंसिद्धये ।
तद्वन्मामकमानसं नटपते पादांबुजं तावकं
सानन्दं समुपैति मुक्तिफलदं कैवल्यसंसिद्धये ॥४९॥

பண்டித ஜனமானது பொருள் சம்பாதிப்பதின்பொருட்டு அரசனை எப்படி அடைகின்றதோ, சிஷ்ய சமூகமானது ஞானத்தை அடைவதின்பொருட்டு உத்தமகுருவை எப்படி அடைகின்றதோ, ஓ! நடநாயகா அதுபோல் என்னுடைய மனஸானது முக்தி பலத்தைக்கொடுக்கின்ற உம்முடைய சரணகமலத்தை, மோக்ஷத்தை அடைவதின்பொருட்டு ஆனந்தத்தோடுகூட அடைகிறது. (49)

नामं नामं त्वदीयं पदकमलयुगं मञ्जुमञ्जीरयुक्तं
दर्शं दर्शं त्वदीयं वदनशशधरं मन्दहासेनयुक्तम् ।
स्मारं स्मारं त्वदीयं गुणनिचयलवं भोगिराड्वर्णनीयं
ध्यायं ध्यायं कदा वा हृदयसरसिजे त्वामहं निर्वृतः स्याम् ॥५०॥

ஓ! திவ்ய நடேச! அழகான பாதஸரங்களோடுகூடிய உம்முடைய இரண்டுசரணகமலத்தைச்சொல்லிச் சொல்லி வணங்கி வணங்கி புன்சிரிப்போடுகூடிய உம்முடைய முக சந்திரனைப்பார்த்துப் பார்த்து ஆதிசேஷனால் வர்ணிக்கத்தகுந்த உம்முடைய குண சமூகத்தினுடைய லேசத்தை நினைத்து நினைத்து என்னுடைய ஹிருதய புண்டரீகத்தில் உம்மை தியானம்செய்து தியானம்செய்து நான் எப்பொழுது ஸுகத்தையடையப்போகின்றேன். சிவனே குரு. சிவனே வேதம். சிவனே தேவன். சிவனே ப்ரபு. நாம் சிவனே. ! எல்லாம் சிவனே. சிவனைக்காட்டிலும் வேறொன்று மில்லை. பரமசிவனையே நன்றாய் அறிந்து ஸ்துதித்து த்யானஞ் செய்யவேண்டும். மற்றவைகளைச் சொல்லுவதும் நினைப்பதும் வாக்கு முதலானதுகளுக்குக்லேசமே, என்று வராஹோபநிடதங் கூறுவதால் எந்த நாவு ஈசனை ஸ்துதிசெய்கிறதோ அதுதான் நாவு. எந்தக் கண்கள் ஈசனைப் பார்க்கின்றனவோ அவைதான் கண்கள், எந்த மனம் ஈசனை த்யானஞ்செய்கிறதோ அதுதான் மனம். என்று சங்கரபகவத்பாதாள் சிவானந்தலஹரியில் ஸ்துதி செய்திருப்பதாலும் மற்ற சப்தங்களைச் சொல்லாமல் உம்முடைய நாமாக்களையே சொல்லியும் உம்முடைய சரணத்தையே வணங்கியும் மற்றவர்களைப்பாராமல் உம்மையே பார்த்துக்கொண்டும், மற்ற துக்க கரங்களான அநித்யங்களான பதார்த்தங்களை நினையாமல் உம்மையே நினைத்தும் உம்மையே த்யானம்செய்தும் எப்பொழுது பரம சுகத்தை அடையப்போகிறேன். இதனால் ஒருவன் துக்க லேசமில்லாத சுகத்தை அடையவேண்டுமானல்

ஸ்ரீதிவ்யநடேசனையே ஸ்துதிசெய்யவேணும் நமஸ்கரிக்கவேணும் தரிசிக்கவேணும், ஸ்மரிக்கவேணும், த்யானஞ்செய்யவேணும் என்பதை ஸ்துதிகர்த்தா நிரூபிக்கின்றார். ஹிருதயாகாசவாஸியான ஆத்மஸ்வரூபமும் சிதம்பரவாஸியான நடேசஸ்ரூபமும் ஒன்றென்று 35-வது ஸ்துதியால் நிரூபித்திருப்பதால் ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்கவேணும். அதுதான்நித்யானந்தஸ்வரூபமான மோக்ஷம், அதற்குசாதனமாக தியானஞ்செய்யவேணும் அதற்கு சாதனமாக சிரவணஞ்செய்யவேணும் என்கிற சுருத்யர்த்தத்தையும் ப்ரகாசித்திருக்கின்றார். (50)

(தொடரும்.)

ராஜா. சோமசேகரதீக்ஷிதர்

---

# மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(1042-ம்பக்கத்தொடர்ச்சி)

மத்வமதத்தில் சுருதிஸ்மிருதிபுராணம், இதிஹாஸம், தர்க்கம் வியாகரணம், மீமாம்ஸை, சந்தஸ்ஸு, முதலிய ஸகல வித்யைகளும் மற்ற மதஸ்தர்கள் ஒப்புக்கொள்ளாத மத்வருடைய பிரதிபையில்மாத்திரம் பிரகாசிக்கின்ற லோகவிலக்ஷண வித்யைகள் என்பது நான்காவது ரஹஸ்யம். அது வருமாறு,

வியாஸாசாரியாள் இயற்றிய பிரும்ம ஸூத்திரத்திற்கு அத்வைதம், சைவவிசிஷ்டாத்வைதம், வைஷ்ணவ விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம், துவைதாத்வைதம், முதலிய மற்ற மதங்களில் பாஷ்யகாரர்கள் பாஷ்யம் செய்யும்பொழுது குருபரம்பரையாக அனுதிகாலம் தொடுத்து அத்யயன ஸம்பிரதாயத்தில் வந்துகொண்டிருக்கும்வேதவாக்யங்களையும் மனு வியாஸர் முதலிய மஹர்ஷிகளுடைய ஸ்மிருதி புராணதி வாக்யங்களையும் அவிருத்தகௌதமீயதர்க்க நியாயங்களையும், ஜைமினீய மீமாம்ஸா நியாயங்களையும், நன்குபர்யாலோசனம்செய்து பாணினீயவியாகரணத்திற்குக் கட்டுப்பட்டு ஸுபந்தபதங்களைப் பிரயோகஞ்செய்து பிங்களாதிஆசார்யாளாலே செய்யப்பட்ட சந்தஸ் சாஸ்திரத்திற்கு அனுஸாரமாகவ்ருத்தங்களை அமைத்துச் சுலோகங்களை செய்தும்அவரவர்களுக்குஸ்வஸ்வபுத்தியனுஸாரமாகப் பிரமாணங்

களால் வெளியாகும் அர்த்தங்களை அந்தந்த் பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டு பாஷ்யமூலமாக வெளியிட்டு லோகோபகாரம் செய்திருப்பதை யாவருமறிவார்கள். அதில் ஸந்தேகமில்லை. நமதுமத் வாச்சார்யாளுக்கோ பிரும்மஸூத்திரங்களுக்கு பாஷ்யம் செய்வதில் பிரமாணுன்வேஷணம் முதலிய யாதொரு சிரமமுமில்லை.

ஏனெனில் எந்தெந்த ஸூத்திரங்களுக்கு எந்தெந்த அர்த்தங்களைச் சொல்லவேண்டுமென்று மத்வாசார்யாளுக்குப் பிரதிபையில் ஸ்புரிக்கின்றதோ அந்தந்த அர்த்தங்களைப் பிரகாசப்படுத்துவதற்கு உடனுடன் புதுமாதிரியான சுருதிஸ்மிருதி முதலிய வசனங்கள் காத்துக்கொண்டேயிருக்கும்.

लौकिकानां हि साधूनामर्थं वागनुवर्तते ।
ऋषीणां पुनराद्यानां वाचमर्थोऽनुधावति ॥

"லௌகிகர்களான ஸாதுக்கள் எது இருக்குமோ அவ்விதம் இருப்பதைப் பார்த்துச் சொல்லுவார்கள். முன்னோர்களான மஹர்ஷிகளோ வென்றால் எதைச்சொல்லுவார்களோ அது அவ்விதம் நடக்கும்." என்று சொல்லுவதுண்டு. அதுபோல் பிரகிருதத்தில் ஸாதுக்களான மற்ற பாஷ்யகாரர்கள் எது பிரமாணத்தில் உள்ளதோ அதைச் சொல்லுவார்கள். கலியுக மஹர்ஷியான மத்வாச்சார்யாளோவென்றால் எதைச் சொல்லுவார்களோ, அது புதுமாதிரி சுருதிமுதலிய பிரமாணங்களிலிருக்கும். எந்த அர்த்தங்களை ஸாதிக்கவேண்டுமானாலும் அதற்கு அனுகுணமாக மத்வருடைய வாக்கிலிருந்து சுருதிவசனங்கள் வந்துகொண்டே இருக்கும். மத்வருடைய வாக்கிலிருந்து வருவது எல்லாம் வேதம்தான். இந்த அபிப்பிராயத்தையே,

यत्र मध्वगिरो वेदा यत्र धर्मोऽर्थसाधनम् ।
यत्र स्वप्रतिभा मानं तस्मै श्रीकलये नमः ॥

'எந்தக்கலியில் மத்வருடைய வாக்கிலிருந்து வரும் வசனங்களெல்லாம் வேதங்களாய்விட்டதோ! சிஷ்யர்களிடத்திலிருந்து பணத்தை ஏராளமாக ஸம்பாதித்துக்கொடுக்கும் தப்தமுத்ராதாரணம் முதலியதே முக்ய தர்மமாகிவிட்டதோ! ஆத்மஸாக்ஷிப் பிரத்யக்ஷமே பிரபலப் பிரமாணமென்று மத்வ கிரந்தங்களில், எழுதியபடி சுருதி பிரமாணமென்பதுபோய் அவரவர்களின்

மனதில் தோன்றுவதே அவரவர்களுக்குப் பிரமாணமென்று ஏற்பட்டுவிட்டதோ! அப்பேர்ப்பட்ட ஸ்ரீகவியின்பொருட்டு நமஸ்காரம்" என்று கவிப்பிரசம்ஸை என்கிற கிரந்தத்தில் ஓர் மஹாகவி கூறியிருக்கிறார்.

மத்வாச்சாரியாள் பிரும்மஸூத்திர பாஷ்யத்தில் ஸூத்திரங்களுக்குத் தனக்குத் தோன்றிய ஓர் அர்த்தத்தைக் கூறிவிட்டு அதற்குப்பிரமாணமாக எடுத்துக்காட்டும் சுருதிகள் வருமாறு—

சதுர, கமட, மாடர, கௌண்டரவ்ய, கௌண்டின்ய, மாண்டவ்ய, மார்கண்டவ்ய, மௌத்கல்ய, பௌஷ்யாயண, பௌத்ராயண, ஸௌகராயண, பாராசர்யாயண, மாத்யந்தினபன, காஷாரவ, கௌஷாரவ, காஷாயண, கௌஷாயண, பிருஹத்உத்தாலக, ஔத்தாலகாயன, கௌசிக, ஸௌபர்ண, சாண்டில்ய, வத்ஸ, கௌபவன, பால்லவேய, ஆக்னிவேச்ய, சதுர்வேதசிகா, சதுர்வேதஸம்ஹிதா, இந்திரத்யும்ன, கௌரவ்ய, பைங்கி, ஸௌத்ராயண, பரமசுருதி, முதலிய சுருதிகளே மத்வசுருதிகள்.

மதங்களில் ஸமரஸாபிமானம் பாராட்டும் பெரியோர்களே தாங்கள் இதுவரையில் இதுமாதிரி சுருதிகளை எங்கேயாவது பார்த்திருக்கீர்களா? அல்லது யாரிடத்திலாவது கேட்டுத்தானிருக்கீர்களா? இருக்காது. அவ்வித சுருதிகள்உலகத்திலிருந்தால் தானே தாங்கள் கேட்டிருக்கக்கூடும், இவ்வித சுருதிகள் மத்வருடைய ஹிருதயத்தில்தான் இருக்கின்றன. வேதங்களில் வர்சப் பிராம்மணங்களில் சில மஹர்ஷிகளுடைய நாமதேயங்கள் அகப்படும். ராமாயணாதிகளிலும் சிலசில மஹர்ஷிகளின் நாமதேயங்கள்அகப்படும். அவ்விதம் அகப்படும் ஒவ்வொரு நாமதேயங்களையும் வைத்து ஒவ்வோர் சுருதிகள் மத்வரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உலகத்தில் பல மனுஷ்யர்களுக்குப் பல நாமதேயங்கள் இருக்கின்றன. வேண்டுமானால் அவைகளை வைத்தும் வைத்தினாத சுருதி வெங்கட்டராம சுருதி முதலிய பல சுருதிகள் கிளம்பும். இவ்விதம் நமது இஷ்டப்படி சுருதிகளை கல்பித்துக்கொண்டு பிரும்ம ஸூத்திரத்திற்கு எவ்வளவு பாஷ்யங்கள்தான் செய்யமுடியாது என்பதைஉலகமறியும்.இம்மட்டோ எவ்வளவோ ஸ்மிருதி புராணேதிஹாஸங்கள் மத்வ பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வருமாறு.

நாராயணஸம்ஹிதா, பிருஹத் ஸம்ஹிதா, மஹாஸம்ஹிதா, நாராயண தந்திரம், பிருஹத் தந்திரம், புருஷோத்தம தந்திரம், மாயாவைபவம்,பவிஷ்யத்பர்வ பிரும்மதந்திரம்,நாராயணாத்யாத்மம் பரமஸம்ஹிதா, பாகவத தந்திரம், பிரும்ம தர்க்கம், வியோம ஸம்ஹிதா, மஹா கௌர்மம், முதலிய கணக்கிலடங்கப்படாத ஸ்மிருதி புராணேதிஹாஸங்கள் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. பெரியோர்களே இவைகளையாவது பார்த்தோ கேட்டோ இருப் பீர்களா? இருக்காது. அவ்வித ஸ்மிருதிமுதலியதுகள் உலகத்தில் இருந்தால்தானே கேட்டிருக்கக்கூடும். இவைகளும் மத்வருடைய ஹிருதயத்தில்தானிருக்கின்றன.

न हि स्वतन्त्रश्रुति कल्पनसाहसिकस्य स्मृतिकल्पनाद्भयमस्ति ।

"தன்னிஷ்டப்படி ஸ்வதந்திரமாக சுருதியையே கல்பிக்கும் ஸாஹஸமுடைய மத்வருக்கு ஸ்மிருதியைக் கல்ப்பிப்பதில் பயம் இல்லையல்லவா'' என்று பகவத்கீதாவ்யாக்யையில் ஸ்ரீவெங்கட நாதாசாரியாள் கூறியிருக்கின்றார்.

இன்னும் மத்வமதத்தில் பதினான்குவித்யைகளுள் ஒன்றாகிய நியாயம் என்னும் தர்க்க சாஸ்திரம் மற்றவர்களுக்குப்போல் கௌதமாதிகளால் செய்யப்பட்ட தர்க்கசாஸ்திரமன்று. பின்னை யோவெனில் அதுவும் புதியதுதான். அதென்னவெனில் கூறுவாம். ஆதியில் விஷ்ணுவானவர் நாராயணரூபியாயிருந்து ஐம்பதுகோடி கிரந்தமாகச்செய்ததை மறுபடியும் வியாஸரூபியாய் இருந்துகொண்டு ஸங்கிரஹம்செய்து ஐயாயிரம் கிரந்தமாகப் பண்ணி பிரும்ம தர்க்கம் என்கிற நாமதேயங்கொண்ட சாஸ்திர ரூபமாக வெளியிட்டார். இதுதான் தர்க்க சாஸ்திரமென்று சொல்லப்படுவது. இந்த சாஸ்திரம் மத்வவேதாந்த சாஸ்திரம் படிப்பதற்குப் பூர்வாங்கமாகவுள்ளது. இதில் பிரத்யக்ஷம்முதலிய பிரமாணங்களுங்கும், உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலிய தாத் பர்யலிங்கங்களுக்கும், சுருதிலிங்கம் முதலிய விநியோஜகப் பிரமா ணங்களுக்கும் உள்ள ஸ்வரூபம் பிராமாண்யம் பிராபல்யதௌர்பல் யங்கள்முதலியவைகளை மத்வவேதாந்த சாஸ்திரத்திற்கு அனுகூல மாகச் சொல்லியிருக்கும். மற்ற மதங்களில் உபக்ரமம், பிரபலம், உபஸம்ஹாரம், துர்பலம், என்று சொல்லியிருக்கும் மத்வமத தர்க்கமான பிரும்ம தர்க்கத்தில் உபஸம்ஹாரம், பிரபலம், உபக்ர

மம், தூர்பலமென்று அதற்கு மாறுதலாகச் சொல்லியிருக்கும். இவ்விதம் மாறுதலாகச் சொல்லியிருக்கும் விஷயத்தை.

सकलमीमांसाव्यवहारविरुद्धो नयसरणिग्रन्थानभिज्ञैरर्वाचीनैः स्वमतपरमतवैलक्षण्य प्रकटनाय कल्पितोऽयमुपक्रमोपसंहारबलाबलव्यत्ययो यवनगुरूपदिष्टशौचमुखप्रक्षालनपौर्वापर्यव्यत्ययवदुपेक्षणीयः प्रामाणिकैः ॥

"மீமாம்ஸா நியாயங்களின் மார்க்கங்களைப் போதிக்கும் கிரந்தங்களையே படிக்காத ஆதுனிகர்களான சில ஆசார்யர்களாலே தன் மதத்திற்கும், பிறர் மதத்திற்கும் வித்யாஸம் காட்டுவதற்காகவே ஸகல மீமாம்ஸா சாஸ்திர வியவஹாரங்களுக்கும் விரோதமாகக் கல்பிக்கப்பட்ட இந்த உபக்ரமோபஸம்ஹாரங்களுடைய பலாபலங்களின் மாறுதலானது யவனகுருவினால் தனது சிஷ்யர்களுக்கு மற்ற மதஸ்தர்கள் முந்தி சௌசம் பண்ணிப் பிந்தி முகப் பிரக்ஷாளனம் செய்யும் கிரமத்தை மாத்தி, முகப் பிரக்ஷாளனம் முந்தி செய்து பிந்தி சௌசம் பண்ணும்படி உபதேசிக்கப்பட்ட கிரமத்தின் மாறுதல்போல் பிராமாணிகர்களால் உபேக்ஷிக்கத் தக்கது." என்னும் வசனத்தால் ஸ்ரீமத் தீக்ஷிதேந்திராள் உபக்ரம பராக்ரமத்தில் கண்டித்திருக்கிறார்கள். இதனால் மத்வமதத்தில் தர்க்கசாஸ்திரம் லோக விலக்ஷணமென்று முடிவாயிற்று. இவ்விதமான பிரும்மதர்க்கம் என்னும் அத்புத தர்க்கசாஸ்திர புஸ்தகமும் மத்வாசார்யாளுடைய ஹிருதய கமலத்தில்தானுள்ளது. வெளியில் அகப்படாது.

பிரும்ம தர்க்கத்திலிருப்பதாக மத்வாசார்யால் கூறப்பட்ட சில சுலோகங்கள் மாத்திரம் மத்வபாஷ்யங்களில் அகப்படும்.

இதுபோலவே மத்வமதத்தில் வியாகரண சாஸ்திரமும் லோகவிலக்ஷணந்தான். அதைப்பற்றிக்கொஞ்சம் விசாரிப்போம்.

மத்வமதத்தில் மற்ற மதங்களில் போலப் பாணிநீய வியாகரணத்தை அனுஸரித்துத்தான் சப்தப் பிரயோகங்கள் பண்ண வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஏனெனில் ஐந்திரம் சாந்திரம் முதலிய நவ வியாகரணங்களைக் கற்றுணர்ந்த ஸ்ரீ ஹனுமானுடைய அவதார பூதராக மத்வாசார்யாளிருப்பதால் அவர்களுடைய சப்தப்பிரயோகங்கள் பாணிநீய வியாகரணத்திற்குக் கட்டுப்பட

வேணுமென்கிற நிர்பந்தமில்லை, உதாஹரணமாக ஒன்றைக் கூறுவாம்.—

बृहजातिजीवकमलासनशब्दराशिषु ।

என்று ஜாதி, ஜீவன், பிரும்மா, சப்தராசி, என்கிற அர்த்தங்களையுடைய ப்ருஹ என்னும் தாதுவின்மேல் மனின்பிரத்யயம் வந்து ஏற்பட்ட "ப்ருஹ்ம" என்னும் சப்தம் ரூடியினால் ஜீவனைக் கூறுகின்றது என்று மத்வபாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வித அர்த்தமுள்ள தாதுவானது பாணிநீயவியாகரணத்தில்கிடையாது வேறு எந்த வியாகரணத்தில் இருக்கின்றதோ மத்வரைத்தான் கேழ்க்கவேண்டும். இதுமாதிரிப் பல உதாரணங்கள் உண்டு. விரிக்கில் பெருகும். பாணிநீய வியாகரணத்தின்படி அபத்தங்களென்று சொல்லப்படும் சப்தங்களைக்கொண்டே பெரும்பாலும் மத்வரால் பாஷ்யம் அநுவ்யாக்யானம் மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலிய கிரந்தங்களில் வியவஹரிக்கப்பட்டிருக்கிறது. அதெல்லாம் வேறு வியாகரணங்களைக் கொண்டுதான் ஸரிப்படுத்தவேண்டும், மத்வபாஷ்யத்திற்கு வியாக்யானம் செய்பவர்களால்

स्वकीयग्रन्थस्यार्षत्वं द्योतयितुं अबद्धशब्दं प्रयुङ्क्ते ।

"தனது கிரந்தம் ஆர்ஷம் அதாவது ரிஷியாகிய தம்மால் செய்யப்பட்டது என்று தெரிவிக்கவே அபத்தமான சப்தத்தை ஆசார்யர் பிரயோகித்திருக்கிறார்" என்றும் உபபத்தி செய்யப்பட்டிருக்கிறது இதுபோல் மத்வமதத்தில் சந்தஸ் சாஸ்திரமும் இதர விலக்ஷணம் தான். ஏனெனில் மத்வருடைய கிரந்தங்களிலுள்ள சுலோகங்கள் பூர்வார்த்தம் உத்தரார்த்தம்இவைகளின் பாதங்கள் ஒரேவ்ருத்தத்திற்குக் கட்டுப்பட்டவைகளாயிராது. ஒரு சுலோகத்திற்குள் அனேக வ்ருத்தங்கள் வந்துவிடும். பாதங்களில் அக்ஷரஸங்கியை அதிகமும் குறைவுமாயிருக்கும். யதிபங்கத்திற்குக் கணக்கேயில்லை. இவைகள் அவருடைய கிரந்தத்தைப் பார்ப்பவர்களுக்கு வெளிப்படையான விஷயம். ஆகையால் மத்வ கிரந்தங்களிலுள்ள சுலோகங்களின் வ்ருத்தலக்ஷணமே உலக விலக்ஷணமாயுள்ளது.

இவ்விதமே பூர்வ மீமாம்ஸையும் மத்வமதத்தில் விலக்ஷணம் தான் ஜைமினீய மீமாம்ஸைக்கும் மத்வமீமாம்ஸைக்கும் வித்யாஸங்கள்பல. அவற்றைக்கொஞ்சம் விசாரிப்பாம்.

ஸத்திரம்என்னும் யாகவிசேஷத்தில் அனேகம் யஜமானர்கள் அவர்களே ரித்விக்குகளின் கார்யத்தையும் செய்துகொண்டு ரித்விக்ஸ்தானத்திலும் இருப்பார்கள். எல்லாருக்கும் யாகபல முண்டு என்று பிரஸித்தமாயுள்ள ஜைமினீய மீமாம்ஸையில் கூறியிருக்கிறது. மத்வருடைய புது மீமாம்ஸையில் ஒருவர்தான் யஜமானர். மற்றவர்கள் ரித்விக்குகள்தான் யஜமானர்களன்று ஆனாலும் அவர்களுக்கு யாகபலமுண்டு. இதுபோல் துவாத சாஹ ம என்னும் யாகம அஹீனம்,ஸத்திரம்என்றும், இரண்டுவித யாகங்களின் லக்ஷணமிருப்பதால் இரண்டு விதமாயுள்ளது என்று பிரஸித்த மீமாம்ஸையில் உள்ளது. மத்வமீமாம்ஸையிலோ வென்றால் க்ரது ஸத்திரம் ஆக இரண்டுவிதமாயுள்ளது. என்று கூறியிருக்கிறது. க்ரது என்பது எல்லா யாகத்திற்கும் பொது வானபெயர். ஸத்திரமும் க்ரதுதான். அவ்விதமிருக்க, மனுஷ்ய னாகவும் பிராம்மணனாகவும் என்பதுபோல் க்ரதுவாகவும், ஸத்திர மாகவும் இருக்கிறது என்று க்ரது சப்தத்தின் அர்த்தமே தெரியாமல் கூறப்பட்டிருக்கிறது.

தீக்ஷணீயேஷ்டி முதலிய ஸகலமான அங்கங்களுடன்கூடிய க்ரது எல்லா யாகங்களிலும் அனுவிருத்திக்கிறபடியால் சிலாக்ய மாயுள்ளது என்று மத்வ மீமாம்ஸையில் கூறப்பட்டிருக்கிறது. பிரகிருதியாயுள்ள சில யாகங்களின் அங்கங்கள் அதன் விகிருதி களாகிய சில யாகங்களில் அதிதேசம் செய்யப்படும், அங்கி யாகிய க்ரதுவே அதிதேசம் செய்யப்படாது, அதுவும் எல்லா யாகங்களிலும் அதிதேசம் செய்யப்படாது. அவ்விதம் அதி தேசம் செய்யப்படுவதால் ஒரு சிலாக்யத் தன்மையும் கிடை யாது என்பது பிரஸித்த மீமாம்ஸையைப் பார்த்தவர்களுக்கு வெளிப்படை. யாகீய பசு ஹிம்ஸையானது அங்கமாயிருந்தாலும், அங்கியாகிய யாகத்தைவிடப் பிரபலமென்று மத்வ மீமாம்ஸையில் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பிராபல்யம்மத்வருக்குத்தான் தெரி யும். ஸ்ரீஜைமினி மஹர்ஷி அறியவில்லை.

மத்வமதத்தில் பிரும்மஸூத்திரம் ஒவ்வொன்றிலும் ஆரம்பத் திலும், முடிவிலும், ஓங்காரத்தை ஊஹம்பண்ணிக்கொள்ளவேண் டுமென்று கருதிமுதல் ஸூத்திரத்தில் முதலில் தனியாக ஓங் காரம் சொல்லப்பட்டிருக்கிறது, என்பது மத்வமீமாம்ஸை. வேறொருபதத்தின் ஸ்தானத்தில் ஓங்காரம் சொல்லப்படாமல்

ஸ்வதந்திரமாகச் சொல்லப்படுவதால் ஊஹம் என்றுசொல்வது பிரஸித்தமீமாம்ஸைக்கு ஒத்துவாரதது. ஜ்யோதிஷ்டோமம் என்னும்பதத்திற்கு ஜ்யோதிஸ்ஸுகளின் ஸ்தோமம், ஜ்யோதிஷ் டோமம் என்றும்,வியுத்பத்திமத்வமீமாம்ஸையில். பிரஸித்தமீமாம் ஸையில் ஜ்யோதிஸ் என்கிறபெயருடையஸ்தோமங்களைஉடையது என்று வியுத்பத்தி. இவ்விதம் பிரஸித்தமீமாம்ஸைக்கும் மத்வ மீமாம்ஸைக்கும் பலவித்யாஸங்களுண்டு.

இன்னும் பலவிடங்களில் பிரஸித்த ஜைமினீயமீமாம்ஸையில் சொல்லியிருப்பதாக மத்வ கிரந்தங்களில் சொல்லியிருக்கும் அந்த விஷயத்தைப் பிரஸித்தமீமாம்ஸையில் பார்த்தால் அகப்படவே அகப்படாது. அங்கு வேறு விதமாயிருக்கும். அவைகளை விரிக்கில் பெருகும்.

இதுபோல் உலகப்பிரஸித்தமான பாரதம், ராமாயணம், பதினெட்டு மஹாபுராணங்கள், உபபுராணங்கள், ஸ்மிருதிகள், முதலியதில் மத்வமதத்திற்கு அனுகூலமாகப் பல சுலோகங்கள் புதிது புதிதாக அங்கங்கே சேர்க்கப்பட்டிருக்கும். மத்வமதத் திற்குப் பிரதிகூலமாகஉள்ள பல சுலோகங்கள் அவ்விடமிருந்து பிடுங்கி எறியப்பட்டிருக்கும். அதற்காகவே தத்காலத்திலும் புதியதை வேண்டியவரையில் சேர்த்தும், பழையதைத் தாரா ளமாகத் தள்ளியும், பல பாரதாதி புஸ்தகங்கள் அந்த மதஸ்தர் களாலே அச்சுப்போடப்பட்டும் வருகின்றன. என்ன புதிதாய் அச்சுபோடப்பட்டாலும், பழையகையெழுத்துப் பிரதியாயுள்ள கிரந்தங்களைப் பார்த்தவர்களுக்கு அந்த ரஹஸ்யங்களும் வெளிப் பட்டுவிடுகின்றன. இதற்கு உதாஹரணங்கள் பல உண்டு. இதரமத தூஷண ரூபமான பல சுலோகங்களைப் புதிதாகச் சேர்த்தும் புராணங்களை அச்சடிப்பதும் அம் மதஸ்தர்களுக்கு வழக்கம். அப்படி அச்சடித்துவரும் வழக்கத்தில்தமது துவைத மதத்திற்குவிரோதமான பரமவைதிகோத்தமமான அத்வைதமதத் தைத் தூஷிக்கக்கருதி

मायावादमसच्छास्त्रं प्रच्छन्नं बौद्धमुच्यते ।

''மாயாவாதமென்கிற அத்வைதமதமானது அஸத்தான சாஸ் திரம் அது பிரச்சன்ன பௌத்தமதமாகச் சொல்லப்படுகின்றது.'' என்பது முதலிய அபத்தங்களான பல சுலோகங்களை நடுவில்

சேர்த்து இதை உலகப்பிரஸித்தி பண்ணவேணுமென்கிற உத்தேசம்கொண்டே தவக்கமில்லாமல் உடனே கர்ம சிரத்தையுடன் பாத்மபுராணத்தை அச்சுப்போட்டு அந்த மதஸ்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த பாத்மபுராணம் வேறு கையெழுத்துப் பிரதிகளைப் பார்த்தவர்களுக்கு அந்த சுலோகம் கிடைக்காது. அப்படிக் கல்பிக்கிற சுலோகங்களையும் புல்லிங்கமாயுள்ள மாயாவாதபதத்தை நபும்ஸகலிங்கமாகப்பண்ணி அபத்தங்களாகவே தான் சேர்க்கிறவழக்கம். தமது மதத்திற்கு அபத்த சுலோகங்கள் கீழ்க்காட்டியபடி அலங்காரங்களன்றோ. இவ்விதம் பழைய புராணங்களில் புதியதைப் புகுத்தியும் பழையதைப் புரட்டியும் சீர்திருத்தக்காரர்கள் தன் னிஷ்டப்படி சீர்திருத்தம் செய்வதற்குப் பல உதாஹரணங்களுண்டு. அதுகளை இன்னொருஸமயம் விரிப்பாம்.

இம்மட்டோ புதிதாக சுருதிபுராணம் முதலியதைக் கல்பிக்கிறது ஒருபக்கம் இருக்கட்டும். மற்றொருவிந்தை எல்லா மதஸ்தர்களும் ஆதரிக்கின்ற பழைய சுருதிஸூத்திரம் கீதை முதலியதை மாற்றாமல் சிலவிடங்களில் அப்படியே வைத்துக்கொண்டே அவ்வசனங்களுக்கு மத்வாசார்யாள் அர்த்தம்கூறும் அழகும் லோகவிலக்ஷணம்தான். அத்யத்புதமாயிருக்கும். அதையும் கொஞ்சம் விசாரிப்போம்.

वसन्ते वसन्ते ज्योतिषा यजेत ।

என்று ஓர் சுருதிவசனம். அதற்கு ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஜ்யோதிஷ்டோம யாகம் செய்யவேண்டுமென்று மற்ற மதஸ்தர்கள் சொல்லும் பொருள். மத்வாசார்யாள் அந்த அர்த்தம் அபாதமாகத்தோன்றும் அர்த்தம் அந்த சுருதியின் வாஸ்தவார்த்தமில்லை. வேதத்தில் உள்ள எல்லா வாக்யங்களுக்குமே பரமாத்மா தான் வாஸ்தவப்பொருள். ஆகலால் கீழ்க்காட்டிய வசனத்திற்கும் பரமாத்மாவே பொருள். எவ்விதமென்றால், ஹே வஸந்தியே! ஹே வசந்தியே!! அதாவது ஸர்வப்பிரதேசத்திலும் வஸிப்பவரே! எல்லாவற்றையும் செய்பவரே! ஆதாவால் இரண்டுதரம் சொன்னது. ஹே ஜ்யோதிஷரே! அதாவது ஸர்வஜகத்தையும் உள்ளடக்கிக் கொண்டவரே! பிராமண ரூபியாயுள்ளவரே! ஹே ஆயஜேதரே!! அதாவது யாகம் செய்பவர்களால் எங்கும் அடையப்பட்டவரே என்று. இவ்விதம் பரமாத்

மாவே கீழ்க்காட்டிய வசனத்திற்கு வாஸ்தவப்பொருள். இவ்விதம்வேறு அர்த்தமுடையதுபோல் மேல்பார்வையில் தோன்றும் எல்லா வசனங்களுக்கும் ஏகாக்ஷராதி நிகண்டுக்களைக்கொண்டு பதங்களை ஒடித்து புத்திமஹிமையால் பாமாத்விநிடத்தில்ஸமந்வயம் செய்யவேண்டும். தெரியாதபோனல் மத்வரைக் கேழ்க்க வேண்டும். சிலசிலவிடங்களில் சிலசில பதத்திற்குப் பாமாத்மபாமாக அர்த்தம் சொல்லமுடியாமல் போனாலும் பாதகமில்லை. அந்த பதத்தை விட்டுவிட்டு பாக்கிப் பதங்களுக்குப் பாமாத்மபாமாக அர்த்தம் சொன்னாலும் போதும், ஒரு வாக்யத்தில் ஒரு பதத்திற்கு அர்த்தமில்லை ஒரு பதத்திற்குத்தான் அர்த்தம் என்று கூறினால் அது எப்படி ஒரு வாக்யமாக ஆகுமென்றால் ஒவ்வொரு பதங்களும் பரஸ்பரம் சேர்ந்து வாக்யரூபமாயிருந்துதான் அர்த்தத்தைப் போதிக்கவேண்டுமென்கிற அவச்யமில்லை. எந்தெந்த பதங்களுக்கு அர்த்தம் பரமாத்மாவினிடத்தில் பொருந்துமோ அந்தந்த பதம் ஒன்றேடொன்று சேராமலே தனித்தனிப் பதங்களாயிருந்துகொண்டே பாமாத்மாவை போதிக்கலாம். போதிக்க முடியாதபதம் போகட்டும் பாதகமில்லை. இவ்விதம் ஸகல சுருதிகளுக்கும் மத்வருடைய மதத்தில் அர்த்தம்வேறு. அவ்வித அர்த்தம் மத்வரைத்தவிர மற்றவர்களால் சொல்லமுடியாது மத்வர் ஸகலமான சுருதிகளுக்கும் இவ்வித அர்த்தத்தைத் தனது கிரந்தங்களில் பூராவாகச் சொல்லி முடிக்காமல் போனாலும் அவரது அனுக்ரஹத்தாலே அவரது சிஷ்யர்களுக்குத் தோன்றினாலும் தோன்றலாம்.

சுருதியின் அர்த்தம் இவ்விதமிருக்கிறது என்பதை ஸ்தாலீபுலாக நியாயமாக ஓரிடத்தில் காட்டினோம். பிரும்ம ஸூத்திரத்திலும் அவ்விதம் காட்டுவோம் उत्पत्त्यसंभवात् என்கிற பிரும்ம ஸூத்திரம்பாஞ்சராத்திர மதத்தைக் கண்டிப்பதற்காகஏற்பட்டது. ஜீவனுக்கு உத்பத்தி ஸம்பவிக்காததால் அவனுக்கு உத்பத்தியைக் கூறும் பாஞ்சராத்திரம் பிரமாணமன்று என்று அர்த்தம். மத்வருக்குப் பாஞ்சராத்திரம் பிரமாணமானதால் தனக்கு இஷ்டமில்லாத சாக்தமதத்தைக் கண்டிப்பதாக அவதாரணம் செய்து,

शक्तिपक्षं दूषयति "उत्पत्त्यसम्भवात् इति ।
नहि पुरुषाननुगृहीत स्त्रीभ्यः उत्पत्तिर्दृश्यते ॥

"சக்திதனியாக ஜகத்திற்குக் காரணமாகமாட்டாள். ஆம்படையானில்லாமல் பிள்ளை பிறக்குமா" என்று அர்த்தம் மத்வரால் கூறப்பட்டிருக்கிறது. ஈசுவான் தனியாகக் காரணமென்று சொன்னாலும் ஆம்படையாளில்லாமல் பிள்ளைபிறக்குமா என்ற கேள்விவரும். இவ்விதம் ஒவ்வொருஸூத்திரங்களுக்கும் அத்புதமான அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. அந்த அர்த்தங்களை அந்த பாஷ்யத்திலேயே கண்டுகொள்க.

இவ்விதமே பகவத்கீதைக்கும் அத்யத்புத அர்த்தங்கள் மத்வரால் கூறப்பட்டிருக்கிறது. அதிலும் ஸ்தாலீபுலாக நியாயமாகக் காட்டுவாம்.

"त्रैगुण्यविषया वेदाः"

"ஸத்துவம்ராஜஸ்தமஸ்" என்னும் குணங்களோடுகூடிய மனுஷ்யர்களுக்கு அவரவர்களுக்கு அனுகூலமாக அவரவர்களின் அதிகாரத்தை அனுஸரித்து ஸ்வர்க்காதி ஸுகஸாதனங்களானயாகாதிகளைப் போதிக்கிறதுகள் வேதங்கள்" என்று அர்த்தமுடைய கீதாவசனத்திற்கு,

त्रैगुण्याख्यं विषं यापयन्ति अपगमयन्तीति त्रैगुण्यविषया वेदाः ।
त्रैगुण्यविषहारिणइति यावत् ॥

"ஸத்துவம் முதலிய முக்குணங்ளாகிய விஷத்தைப் போக்கடிப்பதுகள் வேதங்கள்" என்று கிலிஷ்டமான அர்த்தம் சொல்லி அதற்கனுஸாரமாகக் கல்பிதமான ஸ்மிருதி வசனம் ஒன்றைப்பிரமாணமாகவும் மத்வர் காட்டுகிறார். இதுபோல்

यावानर्थ उदपाने सर्वतस्संप्लुतोदके ।
तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥

'வாபி, கூபம், முதலிய ஸ்வல்ப்ப ஜலமுள்ள இடங்களில் ஏற்படும் ஸ்நானம், பானம் முதலிய பிரயோஜனங்கள் அதிக ஜலமுள்ள சுத்தோதக ஸமுத்திரத்தில் ஏற்படும் பிரயோஜனங்களில் எவ்விதம் அடங்கிவிடுமோ அதுபோலவே வேதோக்த காம்யகர்மங்களால் உண்டாகும் ஸ்வல்ப பிரயோஜனங்கள் அதாவது ஆனந்தலேசங்கள் ஸமுத்ரமாகிய ஆத்மஞானபலமான பிரும்மாநந்த ரூபமுக்தியில் அடங்கிவிடுகின்றன" என்று பொருளுடைய கீதா சுலோகத்திற்கு "எங்கும் ஜலம் வியாபித்து ஒரே ஜலப்பிரளயமாயிருக்கும் பிரளயகாலத்திலும் உதபானாய்

उद्रेकात् पातृराहित्यादनत्वाच्चाखिलस्य च ।
प्रळयेप्युदपानोऽसौ भगवान् हरिरीश्वरः ॥

"என்கிற வசனத்தின்பிரகாரம், உத்-உத்ரிக்தராய் மிஞ்சினவராய் அபா பாதிருரஹிதராய்த் தன்னைக் காப்பாற்ற வேறொருவர் இல்லாதவராய், அந எல்லாவற்றையும் சேஷ்டிக்கும்படி செய்பவராய்உள்ள பகவான் பிரஸன்னராயிருந்தால் எவ்வளவு பலங்கள் ஏற்படுமோ அவ்வளவும் ஸர்வவேதங்களையும் அறிந்தவனுக்கு ஏற்படும் என்று பரமக்லிஷ்டமான அர்த்தம் சொல்லி அதற்குப் பிரமாணமாக ஸ்வகபோல கல்பிதமான வசனத்தையும் மத்வர் காட்டுகிறார். இவ்விதம் கீதைக்கு எந்த பாஷ்யக்காரர்களால்தான் அர்த்தம் மத்வாச்சார்யாரைப்போல் கூறமுடியும். இந்த சுலோக வியாக்யானத்தில்

तद्वेदमेव व्याकुलीकुर्वतो गीताव्याकुलीकरणमुचितमेवेति समाश्वसितव्यम् । वेदगीतयोः प्रारब्धमीदृशमिति वा अनुशोचितव्यम् ।

"கீதைக்கு மத்வர் இவ்விதம் அர்த்தம்பண்ணும் விஷயத்தில் வருத்தப்படக்கூடாது. வேதத்தையே வியாகுலமாகச்செய்பவர் கீதையை வியாகுலமாகச்செய்வது உசிதம்தான் என்று ஆச்வாசப்படவேண்டும். அல்லது வேதத்தினுடையவும், கீதையினுடையவும்பிராப்தம். அதாவது தலையிலெழுத்து. இப்பேர்ப்பட்டது என்று நினைத்து துக்கிக்கவேண்டும்" என்று ஸ்ரீவெங்கடநாதாசார்யாள் கூறுகின்றார்கள். இவ்விதம் உபநிஷத் பிரும்மஸூத்திரம், பகவத்கீதை, என்னும் பிரஸ்தானத்ரயத்திற்கும், பாஷ்யம் மத்வாச்சார்யார்களால்வெகு அழகாகச்செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வித அபூர்வ விஷயங்களை அவரது பாஷ்யங்களில் பார்த்துத் தெரிந்துகொள்க.

இந்த ஸமயத்தில் ஓர் பிராசீன பண்டித சிகாமணியால் எழுதப்பட்ட ஓர் சுலோகம் எனக்கு ஞாபகத்தில் வருகிறது. அதை எழுதி இந்த நான்காவது ரஹஸ்யத்தை முடித்துக் கொள்கிறேன்.

माभूद्वो जननि श्रुते मतिमतां मान्याप्यहं केन चित् क्रुद्धा दुष्टधिया कुमार्गइति ते शुक्पण्डितं मालिना । कल्हारैः कलितामपि स्रजमहोकश्चित् कपिश्चेन्निजादज्ञानाच्छिथिलीकरोति वद किन्तावत् स्रजो हीनता ॥

,'ஹே! சுருதியாகிய தாயே! நான் புத்திமான்களால் விசேஷமாகக் கொண்டாடப்படுபவளாயிருந்தும் பண்டிதம்மானியாயும், துஷ்டபுத்தியாயுமுள்ள ஓர் புருஷனால்குமார்க்கத்தில் இழுக்கப் பட்டேனே எனகிற துக்கம் உனக்கு வேண்டவேவேண்டாம்.

அதனால்உனக்குக் குறைவுகிடையாது. உயர்ந்த கல்ஹார புஷ்பங்களால் கட்டப்பட்டுப் பரிமளம்வீசும் ஹாரத்தை ஓர் கபி தனது அறியாமையால் பிய்ச்செறியுமானால் அதனால் ஹாரத்தின் மஹிமையை அறியாமல் தன்னுடைய மதிஹீனத்தால் இவ்விதம் செய்ததே என்று கபிக்கு நிந்தை ஏற்படுமேயல்லாமல் அந்த ஹாரத்திற்கு என்னகுறைவுவந்துவிடும் சொல்லு தாயே'' என்று சுலோகத்தின்பொருள். இத்துடன் நான்குரஹஸ்யங்கள் முடிந்துவிட்டன. அடுத்த ரஹஸ்யங்கள் அடுத்தாப்போல் வரும்.

போலகம் ஸ்ரீராமசாஸ்திரிகள்.

# சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

## பூரு.

1. சந்த்ரவம்சத்தில் பிறந்தவன் யயாதி. இவனுக்கு இரண்டு மனைவிகள். சுக்ராசார்யர் பெண்ணான தேவயானி ஒருவள். விருஷபர்வாவின் பெண்ணான சர்மிஷ்டை ஒருவள் தேவயானிக்கு யது, துர்வஸு, என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தன. சர்மிஷ்டை அடக்கமுள்ளவள். ஆதலால் யயாதிக்கு அவளிடம் ஆசை அதிகம். அவள் வயிற்றில் த்ருஹ்யு, அநு, பூரு, என மூன்றுகுழந்தைகள் பிறந்தன. சர்மிஷ்டையிடம் பொறாமைகொண்ட தேவயானி சுக்ரரிடம்போய்முறையிட்டாள்.

2. அரசனைக் கிழவனாகும்படி சுக்ரர் சபித்தார். அரசன் அவரைவணங்கி வேண்டினான். கிழத்தனத்தை யாரிடமாவது கொடுத்து பால்யத்தை நீ வாங்கிக்கொள்ளலா மென்றாவர். ஸாதுக்களுக்கு கோபம்வராது, வந்தால் க்ஷணந்தானிருக்கும். ஸ்வபாவத்தில் சாந்தமாயிருப்பர். ரிஷி அநுக்ரஹத்தால் சாபத்தை அரசன் மாற்றிக்கொள்ள ஆசைப்பட்டான். மூத்த பிள்ளையான யதுவை குழந்தாய்! உன் பால்யத்தைக்கொடு. என் கிழத்தனத்தை வாங்கிக்கொள். கொஞ்சநாள்கழித்து பால்யத்தை உனக்கே கொடுத்துவிடுகிறேன் என்றார்.

3. அப்பா! என்னால் முடியாது. வேறுபிள்ளையைக்கேள் என்றான். தந்தைசொல்லைத் தடுக்கலாமா? அவருக்கு கோபம் வந்தது. உனக்கும் உன் பிள்ளைக்கும் ராஜ்யம் கிடைக்காது என்று சபித்தார். அவன் ஸந்ததி யாதவர்? இரண்டாம் பிள்ளையான துர்வஸுவைக் கேட்டார். அவனும் முடியாதென்றான்.

உன் குலம் ராக்ஷஸ ஜாதியாகிவிடும் என்று சாபங்கொடுத்தார். அவன் ஸந்ததி யவனஜாதி. த்ருஹ்யுவைக்கேட்டார். அவனும் துரோஹம் செய்துவிட்டான். அவனையும் சபித்தார். அவன் ஸந்ததி போஜர்கள். அநுவைக்கேட்டார். அவனும் முடியா தென்றான். மிலேச்சனாகும்படி சபித்தார்.

4. பூருவிடம் வந்து குழந்தாய்! ஆயிரம் வருஷங்கழித்து உன்னிடமே கொடுத்துவிடுகிறேன். உன் பால்யத்தைக் கொடு என்றார். அவன் நல்லபிள்ளை. அப்பா! தகப்பன்சொல் கேளாதவன் பிள்ளையோ? குரு சொற்படி நடந்தான். இந்த்ரன் மூனு லோகத்தையும் ஆள்கிறான். குரு சொற்படிகேட்டால் ஆயுஸும் ஸுகமும் உண்டாகும். உமது இஷ்டப்படி நடப்பேன். கிழத்தனத்தைக்கொடும். பால்யத்தை எடுத்துக்கொள்ளும் என்றான்.

5. இதைக்கேட்டவுடன் அவருக்குண்டான ஸந்தோஷத்திற்கு அளவே இல்லை. மகங்குளிர ஆசீர்வாதம் செய்தார். இளமையை வாங்கிக்கொண்டார். அநேக தர்மங்களைச்செய்தார் இவனுடைய தர்மத்தைக்கண்டு தேவரும் பித்ருக்களும் ஸந்தோஷப்பட்டனர். தர்மத்திற்கு விரோதமில்லாமல் ஸுகத்தை அநுபவித்தான். இது போதும் என்கிற எண்ணம் உண்டாகவில்லை. பூருவினிடம் வந்தான்.

6. அப்பா! ஆசைக்கு ஓர் அளவில்லை. ஆசை அநுபவிப்பதால் போவதில்லை. மேல்மேலும் அதிகமாகி வருகிறது. நெருப்பில் நெய்யைக்கொட்டினால் அக்னி அதிகமாக எரிவது போல், அநுபவிக்க அநுபவிக்க ஆசை அதிகமாகிக்கொண்டே வருகிறது. ஆதலால் ஆசையை அடக்குவதுதான் மேல். ஆகையால் நான் அநுபவித்த ஸுகம் போதும். இந்தா! பால்யத்தை எடுத்துக்கொள். கிழத்தனத்தைக்கொடு என்று மாற்றிக்கொண்டார்.

7. காட்டிற்குப்போய் தவம் செய்யவேண்டுமென்று யயாதி ஆசைகொண்டான். மந்திரிகளை அழைத்தான், புரோஹிதர்களைக்கூப்பிட்டான். நல்லநாள்பார்க்கச்சொன்னான். பூருவுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்யுங்கள் என்றான். அவர்கள் மூத்த பிள்ளைகள் நாலுபேரிருக்க கடைசிபிள்ளைக்குப் பட்டம்கட்டுவது தர்மமில்லை என்றார்கள்.

8 யயாதி பிடிவாதமாக பூருவுக்கே ராஜ்யம்கொடுப்பது என்றான். ஏன்? பிதாவுக்கு விரோதமாகநடப்பவன் பிள்ளையில்லை. தாய் தந்தைசொன்னபடிநடக்கும் நல்லபிள்ளையால்தான் தகப்பன் "புத்" நகரத்திலிருந்து விடுபடுகிறான். முதல் நான்குபுத்ரர்களும் நான்சொன்னபடி கேட்கவில்லை. ஆகையால் அவர்கள் புத்ரனாக மாட்டார்கள். பூருவே ஸத் புத்ரன். அவனுக்கேதான் ராஜ்யம். சொற்படிநடப்பவனுக்கே ராஜ்யத்தைக்கொடுக்கும்படி சுக்ரரும் சொன்னார் என்றான்.

9 அரசன் விருப்பப்படியே பூருவுக்கே பட்டாபிஷேகம் செய்தனர். அவன் வம்சமே மேல்மேலும் விருத்தியானது. ஆகையால் தந்தை தாய் சொற்படி நாம் நடக்கவேண்டும். அவர் இஷ்டத்திற்கு விரோதமாக நடக்கக்கூடாது'

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.

---

## வாரவிருத்தாந்தம்.

அன்னதானம்:—18உ காஞ்சீபுரத்திற்கடுத்த நவாஜி தோட்டத்தில் ஸ்ரீ ஏகாம்ரநாதன் எழுந்தருள அங்கு அபிஷேகார்ச்சனை அலங்கார தீபாராதனைகள் செவ்வனே நடந்தன. அங்கு ஓர் ஜமீன்தார் ஆயிரம் ஏழைகளுக்கு அறுசுவையுடன் அன்னதானம் செய்தார். பகவானுடைய ஸன்னிதியில் இச் சிறந்ததானம் செய்த தார்மிகரை ஏழைஉடலைக் கோயிலாகக்கொண்ட கடவுள் வாழ்த்துவார்.

பெருங்கொடை:—22உ காரைக்காலில் ஓர் தனவான் ப்ரஸவ ஆஸ்பத்ரி கட்ட ஒரு லக்ஷரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். மேனாட்டுமுறை நமது வாழ்க்கையில் வேரூன்றிவிட்டதால் ஆஸ்பத்திரிப் ப்ரஸவத்திற்கு அத்யாவச்ய மாகிவிட்டது. பரோபகாரமாக இவ்வளவு பெருந்தொகையை அளிக்கும் வள்ளல் தென்னாட்டிலு மிருப்பது ஆச்சர்யமே. தார்மிகர் வாழ்க.

நன்குமதிப்பராம்:—22உ கல்கத்தா மார்வாரிசங்கம் ராஜப்ரதிநிதிக்கு ஓர் உபசாரப் பத்ரமளித்தது. அதில் சாரதாசட்டம் தங்கள் மதஸம்ப்ரதாய ஸ்வதந்திரத்தைக் கெடுப்பதாக எடுத்துக் காட்டி இருந்தனர். வைச்ராய், இது செய்தது ஸரிதான். இனி இதுபோன்ற சட்டம் வந்தால் உத்திரவு கொடுக்குமுன் உங்கள்

உணர்ச்சியை நன்கு மதிப்பேன் என்றார். இங்ஙனம் தென்னாட்டிற்கு வரும்போது ஓர் தூதுசென்று நம்முணர்ச்சியைக் காட்டினால் ஏதாவது பலனுண்டாகலாம்.

தத்வஞானஸபை:—22உ பாட்னாவில் ஷெ ஸபை கூடிற்று. ஸ்ரீ ராதாகிருஷ்ணன் ஸபைத்தலைவர், நாலாபக்கங்களிலிருந்தும் ப்ரதிநிதிகள் வந்திருந்தனர். மநதின் தத்துவத்தை அறிய அதில் ஓர் பகுதி உண்டு. அதன் தலைவர் எஸ். எல். ஸேநன் என்பவர். நமது வேதாந்த சாஸ்த்ரத்தில் கரைகண்ட பண்டிதர்களுடன் ஒத்துழைத்து ஆராய்ச்சி செய்தால் அபூர்வமானபலனைப்பெறலாம்.

பாராட்டவேண்டும்.—26உ சென்னையில் ஸம்ஸ்கிருத ஸபையினுதாவில் பெருத்த கூட்டம் கூடிற்று. பல கனவான்கள் வந்திருந்தனர். சென்னைப்ரஸிடன்ஸி கலாசாலையில் சிக்கனம் காரணமாக ஸம்ஸ்கிருத வகுப்பை எடுத்து விடுவதைக் கண்டித்தனர். கவர்னரிடம் தூதுசெல்லப் போகின்றனர். சாரதா சட்டத்தைக் கண்டித்து இதுபோல் இக்கனவான்கள் முயற்சி செய்திருந்தால் நன்றாயிருக்கும். இதற்காவது முன்வந்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். சிலர் இந்த விஷயத்திலும் எதிராக இல்லாமலிருப்பதற்காக விசேஷமாக பாராட்டவேண்டும்.

தக்க வரவேற்பு:—26உ கல்கத்தாவில் கூடப்போகும் வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸபைத்தலைவர் கோஸ்வாமி கோகுலநாதஜி வல்லபா சார்யஸ்வாமி ஹௌராஸ்டேஷனில் வந்திறங்க 10 ஆயிரம் ஜநங்கள் கூடி "ஸநாதநதர்மகிஜே" என்ற சப்தம் வானைக்கிழிக்க சக்ரவர்த்தியைப்போல் அவரை வரவேற்றனர், பகவானது அருளால் ஷெ ஸபையால் தர்மந்தழைத்து ஓங்குக.

ஸ்த்ரீதர்மம்:—சென்னையில், வைதிக தர்மாபிமானமுள்ள பெண் ஸபை ஒன்றுண்டு. அதன் கார்யதர்சி ஓர் உயர்ந்த பிராமணகுலத்தில் ப்ரஸித்தமான ஓர் வக்கீலின் குமாரியும் ஓர் ஆஸ்திகசிகாமணியானவக்கீலின் மனைவியுமாம். இக்கார்யதர்சி ஸ்ரீ காஞ்சி காமாக்ஷிஅம்மன் வெள்ளித்தேர் கைங்கரியத்திற்காக ப்ரதி சுக்ரவாரமும் ஓர் ஸத்கதா காலக்ஷேபம் செய்கிறார். அதில் வசூலாகும் தொகை ஷெ உத்தம கைங்கரியத்திற்கு உதவும். மற்ற ஆஸ்திகஸபையோர்களும் இதைப் பின்பற்றுவரோ?

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா.